செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 73 நாள் : 7/2/17

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் :: வேலூர் வீட்டுவசதி பிரிவு

<u>பத்திரிக்கை செய்தி குறிப்பு</u>

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வேலூர் வீட்டுவசதி பிரிவுக்குட்பட்ட, வேலூர், தாராபடவேடு, கழிஞ்சூர், குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர், ஆரணி, செங்கம், ஆற்காடு, காஞ்சிபுரம், சீக்கராஜபுரம், போளுர், வாலாஜா, அரக்கோணம் (ம) திருவண்ணாமலை ஆகிய திட்டப்பகுதியில் ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் பலர் முழுத்தொகையும் செலுத்தி, இந்நாள் வரை விற்பனைப்பத்திரம் பெறாமல் நிலுவையில் உள்ளது. இதுபோன்ற விற்பனைப்பத்திரம் பெறாத ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து இனி வரும் காலங்களில், கோப்பு மற்றும் பதிவேடு பராமரிப்பு கட்டணங்கள் அபராதமாக வசூல் செய்யப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே, அபராதத்தை தவிர்க்க உடன் விற்பனைப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் திட்டங்களில் தவணை முறையில் ஒதுக்கீடு பெற்ற பல ஒதுக்கீட்டாளர்கள், உரிய தவணைக்காலம் முடிவுற்ற நிலையிலும் தவணைத்தொகை செலுத்தப்படாமல் வைத்துள்ளனர். இந்த நிலுவைத் தொகையினை உடனடியாக வாரியத்தில் செலுத்தி, விற்பனைப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும்பட்சத்தில் ஒதுக்கீடு ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது

6/2/17
செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்,
வேலூர் வீட்டுவசதி பிரிவு

செ.ம.தொ.அ. 7/2/17
வேலூர்- 9.